**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.124/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.6 |
| பெயர் | ரீகன் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | முத்து ரத்தினம் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 02.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1–Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் சின்னப்பாநகர் 2ம் வீதியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 22.05.2023 தேதியில் இரவு 9.00 மணியளவில் எனக்கு கணசேன் என்பவர் மூலம் தகவல் வந்தது. புதுக்கோட்டை TVS கார்னர்ல் இருந்து மருப்புனி ரோடு செல்லையா கோவில் ஆர்ச் அருகே இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது அவர் மீது புல்லட் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருததுவமனைக்கு சென்று பார்த்தேன். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அவர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துபோய்விட்டார். மறுநாள் காலை 10.30 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தை பார்வயிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ3. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>குறுக்கு விசாரணை</u>

விபத்திற்கு மறுநாள் காலை 10.30 மணியளவில் நான் சம்பவ இடம் சென்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் வீடுகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சாலையில் வாகன போக்குவரத்து மற்றும் ஆள்நடமாட்டம் அதிகம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். அங்கிருந்த போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்ததன்பேரில் நான் காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அந்த கையெழுத்தை எந்த ஆவணத்தில் செய்கிறேன் என்று தெரிந்து தான் கையெழுத்து செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்பட்ட கையெழுத்தை தான் காவல் நிலையத்தில் நான் செய்து கொடுத்தேன். நான் கையெழுத்திட்ட அறிக்கையில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று என்னால் கூற இயலும். சம்பவம் நடந்த இடத்தில் மேற்கு பக்கம் சுமார் 2 வீடுகள் மட்டும் இருந்தது. சம்பவம் நடந்த ரோட்டின் வடக்கு பக்கம் வீடு இருந்தது. வீடு தவிர காலி இடங்கள் நிறைய இருந்தது. அது தவிர வேறு எதுவும் இல்லை. சம்பவ இடத்தில் என்னென்ன அமைப்புகள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னாலும் இறந்துபோனவர் என்னுடைய நண்பரின் தகப்பனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. சரவணப்பாண்டியன் என்பவர் எனக்கு நண்பர் அல்ல. காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ரீகன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.124/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.7 |
| பெயர் | ஜெயந்த் | கிராமம் | |
| தந்தை பெயர் | ராஜசேகர் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 02.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு அலுவலராக பணிபுரிந்த கடந்த 22.05.2023 தேதியில் இரவு சுமார் 9.20 மணிக்கு கணேசன், த.பெ.வீரப்பன், வயது 65, சக்கரவர்த்திநகர், புதுக்கோட்டை என்பவரை ஜானகி என்பவர் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார். அவரை விசாரணை செய்ததில் 22.05.2023 தேதியில் இரவு 9.00 மணியளவில் மருப்புனி ரோடு வாகன விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் அவரை பரிசோதிக்கும்போது அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவருக்கு வலதுபக்க கண் புருவத்திற்கு மேல் சிதைந்த காயமும், வலது காதில் ரத்தம் வந்தது. அவருக்கு பலதரப்பட்ட காயங்கள் இருந்தது. அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.4. அவர் சிகிச்சை பலனளிக்காமல் 2 நாட்களுக்கு பிறகு இறந்துவிட்டார். இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Sd/– ஜெயந்த்

| |
|---|
| சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.<br>Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,<br>தலைமை நீதித்துறை நடுவர்,<br>புதுக்கோட்டை. |